**உள்ளூர் அபிவிருத்தி ஆதரவளித்தல் செயற்திட்டம் - 2024**

---------------------------------------------------------------------------------

உள்ளூர் அபிவிருத்தி ஆதரவளித்தல் செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் (IDA) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 மே 14 ஆம் திகதிய 6371–எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் உள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் மற்றும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் 04 மாகாணங்களின் மாகாண சபைகள் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. சமூகங்களுக்குப் பதிலளிக்கக்கூடிய மற்றும் கணக்களிப்பொறுப்புடன் சேவைகளை வழங்குவதற்கு உள்ளூராட்சி சபைகளின் திறன்களை வலுப்படுத்துவதும், பங்குபற்றும் மாகாணங்களின் பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதும் செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். , உள்ளூரர் ஆட்சித் திட்டமிடல் முறையை வலுப்படுத்துதல், உள்ளூர் சேவைகள் மற்றும் பொருளாதார உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், நிறுவன அபிவிருத்தி, திட்ட மேலாண்மை மற்றும் அவசர கால எதிர்பாராத சூழ்நிலைகளுக்கான தயார்நிலை மற்றும் அவசரகாலப் பதிலளிப்பு போன்ற பின்வரும் 5 கூறுகளின் கீழ் செயற்திட்டத்தின் செயல்பாடுகள் செயல்படுத்தப்படுகின்றன. கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா17,665.63 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 100.65 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 12,222.41 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது். மிகுதி தொகை ரூபா 4,220.98 மில்லியன் ஐரோப்பிய ஒன்றியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 யூன் 30 இல் தொடங்கியிருந்ததுடன் 2022 திசெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்டக்காலப்பகுதி 2024 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கையின் 2.3.3(இ) ஆம் பந்தி | பொதுச் சேவையில் தனது பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட அதிகாரி ஒருவர், தனது பதவியில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போதே, பதில் கடமை அடிப்படையில் செயற்திட்டமொன்றின் சேவைக்காக விடுவிக்கப்படலாம். இருப்பினும், சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக, வட மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு, அவருக்கு சம்பளமும் வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அந்த அதிகாரியிடமிருந்து இன்னும் ரூபா. 443,333 மீளப் பெறப்பட வேண்டியுள்ளது. | வட மத்திய மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட மேலதிகக் கொடுப்பனவு மீளப் பெறப்படவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக வழங்கப்பட்ட சம்பளக் கொடுப்பனவுகளை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | பெறுகை கையேட்டின் 06 ஆம் பந்தி | மெதிரிகிரிய பிரதேச சபையில் சிறுவர் பூங்காக்களுக்கான 7 உபகரணங்கள், விலைமனுக்கள் கோரப்படாமல் ரூபா. 1,447,658 செலவில் பெறுகை செய்யப்பட்டுள்ளன. | பிரதேச சபையானது 2023 மார்ச் 30 அன்று கடையிடல் முறைமையின்' கீழ் ஐந்து விநியோகஸ்தர்களிடமிருந்து விலைமனுக்களைக் கோரியுள்ளது. இந்த ஏழு பொருட்களினதும் கொள்முதலானது முறையான விலைமனு நடைமுறையைப் பின்பற்றாமல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பெறுகை கையேட்டில் உள்ள வழிகாட்டுதல்களுக்கு இணங்கி நடக்கவும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **இலுப்படிச்சேனையில் கிராமிய சேவை மற்றும் வணிக நிலையங்கள் அமைத்தல்.** | | |
| | (i) ஒப்பந்த நிபந்தனைகளின் ஏல ஆவணங்களின் 49 ஆம் பிரிவு மற்றும் SBD-3 ICTAD இன் 6.4 ஆம் பிரிவின்படி, ஒப்பந்தக்காரர் உத்தேசிக்கப்பட்ட பூர்த்தி திகதிக்குள் பணிகளை முடிக்கத் தவறினால், ஒப்பந்தக்காரர் ஒரு நாளைக்கு 0.05 சதவீதம் என்ற விகிதத்தில் தாமதக்கட்டணத்தை செலுத்தக் கடமைப்பட்டவராவார். இது தொடர்பாக, 104 நாட்கள் தாமதக் காலத்திற்காக ஒப்பந்தக்காரரிடமிருந்து ரூபா.862,921 தொகையை தாமதக் கட்டணத்தை கோருவதற்கு பெறுகை நிறுவனம் தவறியுள்ளது. | தாமதக்கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கையின்படி தாமதத்திற்கான நட்டஈடு வசூலிக்கப்பட வேண்டும். |
| | (ii) ஒவ்வொரு ஒப்பந்தக்காரராலும் செய்யப்பட்ட பணிகள் மீதான முறையற்ற மேற்பார்வை | எதிர்காலத்தில் இத்தகைய சூழ்நிலைகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கான | ஒப்பந்தக் கண்காணிப்பு நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக, 3 ஒப்பந்தக்காரர்களால் ரூபா.1,748,642 மேலதிகமாகச் செலவிடப்பட்டுள்ளதுடன், விலைப்பட்டியலின் (BOQ) 14 பணிப் பொருட்கள் அதன் மதிப்பிடப்பட்ட தொகையை விட 121 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளன. | நடவடிக்கைகள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. | திறம்பட மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | கோரளைப்பற்று பிரதேச சபையின் சேவைப் பணிமனைக்காக ரூபா. 1,627,346 பெறுமதியில் கொள்முதல் செய்யப்பட்ட 14 வகையான உபகரணங்களும் உதிரிப்பாகங்களும், 2024 சனவரி 22 ஆன கணக்காய்வுத் திகதி வரை 7 மாதங்களாக சபையின் களஞ்சிய அறையில் பயன்படுத்தப்படாமல் முடங்கிக் கிடந்தன. | இது தொடர்பான கருத்துரைகள் கிடைக்கப்பெறவில்லை. | கட்டுமானப் பணிகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | **பாசிக்குடா மற்றும் கல்குடாவில் வணிகக் கடைகளை அமைத்தல்** | | |
| (i) | 2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தின் 26 மற்றும் 42 ஆம் பிரிவுகளின்படி, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதியின் மையக் கோட்டிலிருந்து 15.0 மீற்றருக்கு அப்பாலேயே கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இருப்பினும், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி பெறப்படாமல், கல்குடாவின் பெத்தலை பகுதியில் வீதியின் மையக் கோட்டிலிருந்து 8.60 மீற்றர் தூரத்திற்குள், ரூபா.4,063,378 பெறுமதியான 40 அடி நீளத்தைக் கொண்ட 4 கடைகளை உள்ளடக்கிய கொள்கலன் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. | இது தொடர்பான கருத்துரைகள் கிடைக்கப்பெறவில்லை | தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்திற்கு இணங்கச் செயல்படவும். |
| (ii) | கொடுப்பனவுப் பட்டியல் இல. B.8 இன் படி, 16 சுவர் மின்விசிறிகளை (wall fan-12”) | இது தொடர்பான கருத்துரைகள் கிடைக்கப்பெறவில்லை | சொத்துக்கள் அவற்றின் உத்தேசிக்கப்பட்ட |

வழங்குவதற்கும் பொருத்துவதற்கும் ரூபா.240,000 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. எனினும், 15 சுவர் மின்விசிறிகள் பொருத்தப்படாமல் சபையின் தவிசாளரின் ஓய்வறையில் வைக்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது.

நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்.